

சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் நேற்று (17.05.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் சாலைகள் அமைப்பதில் தரக்கட்டுப்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மு.சரவணன், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை – கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையக் கூட்டரங்கில்

# சாலைகள் அமைப்பதில் தரக்கட்டுப்பாடுகள் தொடர்பாக ஆய்வு!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் மேற்கொண்டார்!

சென்னை, மே 18-

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (17.05.2025) சாலைகள் அமைப்பதில் தரக்கட்டுப்பாடுகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், இந்த ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றுகையில், நெடுஞ்சாலைத்துறையின் மூலம் தற்போது 74,021 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இச்சாலை கட்டுமானத்தில் தரக்கட்டுப்பாடு (Quality Control) மிக முக்கிய பங்களிக்கிறது. இது நீடித்த, பாதுகாப்பான மற்றும் நீண்ட காலம் நீடிக்கும் தரமான சாலைகளை உறுதி செய்வதற்கும், வாகன இயக்கச் செலவுகளைக் குறைப்பதற்கும், பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் சாலை அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் மற்றும் உருவாக்கப்படும் அனைத்து சாலைகளில் மேற்கொள்ளப்படும் பணிகளின் தர உறுதி செய்வதற்கு தனியாக ஒரு தர நிர்ணய அமைப்பு தேவை என்ற கருத்தின் அடிப்படையில் தமிழக அரசால் 24.05.2010 அன்று அப்போதைய கழக அரசினால் துறை நிர்வாக சீரமைப்பு மற்றும் வலுபடுத்தலின்கீழ் தரக்கட்டுப்பாடு பிரிவுகளை முழுமையாக செயல்படுத்துவதற்கு ஒரு தர நிர்ணய மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டது.

தரநிர்ணயமேலாண்மை அமைப்பின் மூலம் முறைபடுத்துதல், செயல்படுத்துதல், கட்டுப்படுத்துதல், வழிநடத்துதல், ஒருங்கிணைத்தல் கூறுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்றும், மேலும் இதனை கருத்தில் கொண்டு, புதிய முறையில் மூன்று அடுக்கு தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் தர உறுதியினை செயல்படுத்த தமிழக அரசால் 24.12.2010 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது என்றும், தரக்கட்டுப்பாடுக்காக தனியாக அலகு உள்ளது. இவர்களுக்கு சாலைப் பராமரிப்பு பணியோ அல்லது மதிப்பீடுகள் தயாரிக்கும் பணியோ இல்லை. முழுக்க முழுக்க தரத்தில்தான் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

எனவே தார்க் கலவை மற்றும் சிமெண்ட் கலவை உருவாக்குவதில் தரக்கட்டுப்பாடு பொறியாளர்களுக்கு தான் 100 சதவீதம் பங்கு உள்ளது. தார்க்கலவை பணிக்கு உதவிப் பொறியாளர்கள் கண்டிப்பாக பிளான்டுக்கு (Plant) செல்ல வேண்டும். பொறியாளர்கள் இல்லாமல் எந்த வித பணிகளும் மேற்கொள்ள கூடாது.

தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் மற்றும் தளப் பொறியாளர்கள் தாரின் படிநிலை தரத்தினை பரிசோதனை செய்ய வேண்டும். தார்க் கலவை உருவாக்கும் போது ஜல்லி, தார் மற்றும் இதர மூலப் பொருட்கள் சரியான அளவில் கலக்கப்படுகிறா? என்பதை தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் சாலை சேதமடையாமல் நிலைத்து இருக்கும் என்று தெரிவித்தார்கள்.

சாலை அகலப்படுத்தும் போதும், மண்வேலை, ஜி.எஸ்.பி (G.S.B), டபிள்யு.எம்.எம் (W.M.M) போன்ற பணிகள் நடைபெறுகின்றன. இப்பணிகளுக்கு உரிய தரக்கட்டுப்பாடு பரிசோதனை செய்யப்பட வேண்டும். வெட்மிக்ஸ் (Wet mix) என்றாலே ஈரக்கலவை என்றுதான் அர்த்தம். ஜல்லியின் அளவு மற்றும் ஈரப்பதம் சரியானபடி இருந்தால்தான் சாலையில் இறுகுத் தன்மை (Compaction) உறுதிப்படுத்த முடியும். இதனை தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

கான்கிரீட் கலவையில் சிமெண்ட் கல் மற்றும் தண்ணீர் சரியான அளவில் கலக்கப்படுகிறதா என்பதை பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். தரக்கட்டுப்பாடு பொறியாளர்கள் கான்கிரீட்க்கு ஏழு நாட்கள் மற்றும் 28 நாட்களுக்கு உறுதி சோதனை (Cube Test) மேற்கொள்ளப்பட வேண்டும். அதனை உரிய பதிவேட்டில் பதியப்பட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், ஆய்வுக்கு வரும்போது பொறியாளர்கள் பார்வைக்கு கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்தார்.

பாலங்கள் மற்றும் தடுப்புச்சுவர்களில் பயன்படுத்தப்படும் கம்பிகளின் தரம் மற்றும் எடை உரிய முறையில் சோதனை செய்து பதிவேட்டில் பதியப்பட வேண்டும் என்றும் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மு.சரவணன், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் இரா. செல்வதுரை, நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா. சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைமை இடும் கட்டளைகளை சிரமேற்கொண்டு

# 2026-ல் கழகம் 7வது முறையாக அரியணை ஏற கண்துஞ்சாது பணியாற்றுவோம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்! ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!



சென்னை, மே.18-

சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம், நேற்று (17.05.2025 - சனிக்கிழமை) சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி மஹாலில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப.ரங்கநாதன், எஸ். மணிமுடி, கே.எஸ்.ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே. மூர்த்தி, எம்.விஜயகுமார், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், கே.எஸ்.எம்.நாதன், தமிழன் பிரசன்னா பரிதிஇளம்சுருதி, வே.உமாகாந்தன், மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவ ஜவகர் புனிதவதிஎத்திராசன், இசட்.ஆசாத் பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக் கண்ணு, கூ.பி.ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டிஎஸ். பி.ராஜகோபால், எம்டிஆர் நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர்.

தேர்தல் பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, ஒ.ஏ.நாகலிங்கம், பி.முனியாண்டி, இரா.நரேந்திரன், பி.எம்.யாழினி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, கே.நந்தீஸ்வரன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், க.வினோத், ஜி.ஜே பிரபு, பி.ஸ்ரீராமுலு, எல்பிஎப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், இரா.வீரமணி, எல்.சம்பத்குமார் ம. அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், துரை கண்ணன் கு.கிருஷ்ணமூர்த்தி, ஜி.பி. பிரதீப்குமார், ஆர்.எஸ்.சித்திக், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

தீர்மானங்கள்:

**தீர்மானம்: 1**

பாகிஸ்தான் அத்துமீறல்களுக்கும், தீவிரவாத தாக்குதல்களுக்கும் எதிராக வீரத்துடன் போர் நடத்திய இந்திய ராணுவத்திற்கு நமது ஒன்றுபட்ட ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்துவதற்காக முன்னாள் படை வீரர்கள் அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்குபெறும் மாபெரும் பேரணி, காவல் துறை இயக்குனர் அலுவலகத்தில் இருந்து தீவுத்திடல் அருகே உள்ள போர் நினைவு சின்னம் வரை 10/05/2025 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெறும் என்று தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட ஒரே நாளில் பல மாநிலங்களும் வியக்கும் வகையில் பேரணி நடத்தி இந்திய ராணுவத்திற்கு தமிழ்நாடு மக்களின் ஒற்றுமையையும் ஆதரவையும் பேரணி மூலம் வெளிப்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டி வணங்கி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்: 2**

திராவிட மாடல் அரசர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நான்காண்டு சாதனைகளான மகளிர் விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், மக்களை தேடி மருத்துவம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர், பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவிகிதம் என எண்ணற்ற சாதனைகளை விளக்கும் வகையில் நூற்றுக்கணக்கான புகைப்படங்களும், முப்பரிமாண தொழில்நுட்பத்தின் மூலமாக தயாரிக்கப்பட்ட திரையிசைப் பாடல் காட்சிகளும், ஆலோகிராம் தொழில்நுட்பத்தின் மூலமாக தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர் பேசுகின்ற வகையில் தயாரிக்கப்பட்டிருந்த ஒலி ஒளி காட்சிகளும் இடம் பெற்ற புகைப்படக் கண்காட்சிக்கு வருகை தந்து மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இப்புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம்: 3

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலே 03/05/2025 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அறிவிக்கப்பட்ட நான்காண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டங்களை சென்னை கிழக்கு மாவட்டத்திலுள்ள 13 பகுதி கழகங்களிலும் தலைமை அறிவித்த சிறப்பு பேச்சாளர்களை கொண்டு பகுதி கழக செயலாளர்கள் தலைமையிலே அனைத்து கூட்டங்களும் சிறப்பான முறையில் நடத்தியது போல..

தொடர்ந்து கழகத் தலைமை இடும் கட்டளைகளையும், பணிகளையும், சிரமேற்கொண்டு கண் துஞ்சாது பணியாற்றி 2026 ல் 200 என்பது நிச்சயம் 234 என்பது லட்சியம் என்ற இலக்கை நோக்கி இயங்குகின்ற சாதனை நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் அரியணை ஏற, இரண்டாவது முறையாக நம்முடைய உயிரினும் மேலான அன்பு தலைவர் தளபதியார் அவர்களை ஆட்சி கட்டிலிலே அமர வைக்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.





# தி.மு.க. இளைஞர் அணி

### தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித் தொகை மற்றும் பொற்கிழியாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 17 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

**உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.4,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து, இந்த நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஏப்ரல் மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 17 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1 | மு.தீனதயாளன், த/பெ முத்துகிருஷ்ணன், 11, பஜனை கோயில் தெரு, பட்டாபிராம்சத்திரம், ஆவடி, திருவள்ளூர் – 600 099. |
| 2 | சி.சுரேஷ், த/பெ சின்னராமன், அனுமார் கோயில் தெரு, தாராசுரம், கும்பகோணம், தஞ்சாவூர் – 612 702. |
| 3 | அ.நூருல் ஹசன், த/பெ அபுதாகிர் பாஷா, 22–ஏ, செல்லமுத்து வீதி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் – 642 126. |
| 4 | மு.தயாநிதி, த/பெ முனியாண்டி, ஆஸ்பத்திரி 2–வது தெரு, முதுகுளத்தூர், இராமநாதபுரம் – 623 518. |
| 5 | வி.செவ்வந்தி, த/பெ விமல், 380, அம்பேத்கர் நகர், அரூர், தருமபுரி – 636 903. |
| 6 | செ.ஜீவா, க/பெ செந்தில்முருகன், மாரியம்மன் கோயில் வீதி, கோட்டகம், கழுமரம், திருக்கோவிலூர், விழுப்புரம் – 605 754. |
| 7 | ரா.வெங்கடேஷன், த/பெ ராஜு, அம்பேத்கர் தெரு, கொங்கு நகர், திருப்பூர் – 641 607. |
| 8 | மூ.முத்தையா, த/பெ மூக்கன், 128, மேற்கு கருவேலம்பட்டி, கப்பலூர், திருப்பரங்குன்றம், மதுரை – 625 008. |
| 9 | ச.வைரத்தம்மாள், க/பெ சண்முகம், 434, மேற்கு வீதி, அனந்தகோபாலபுரம், பாதிரங்கோட்டை, திருவோணம், தஞ்சாவூர் – 614 614. |
| 10 | ஏ.ராஜலட்சுமி, த/பெ ஏழுமலை, 1/429, சின்ன ஒடிளாபுரம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் – 601 201. |
| 11 | இ.முகமது அனஸ், த/பெ இஸ்மாயில் செரீஃப், 24–டி, வசந்தம் நகர்–2, ஆத்துப்பாலம், கோயம்புத்தூர் – 641 023. |
| 12 | சேரு அம்மாள், க/பெ இரஹ்மத்துல்லா, 32/16, குட்டி கிராமணி தெரு, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028. |
| 13 | ம.முஹமது ஆஷிக், த/பெ மக்புல்லா, 17/1, பத்திரிக்கையாளர் காலனி, பாரதி நகர், சின்னியம்பாளையம், ஈரோடு – 638 104. |
| 14 | ச.விஷ்ணுபிரியா, த/பெ சக்திவேல், 138–ஏ/6, வடக்குத்தெரு, கல்துறை, கோட்டத்துறை, பழனி, திண்டுக்கல் – 624 617. |
| 15 | தீபன்ராஜ், 41/23, நாவிதர் நகர், ஆலப்பாக்கம், வல்லம், செங்கல்பட்டு – 603 003. |
| 16 | கே.முருகையன், த/பெ கேசவன், மாரியம்மன் கோயில் தெரு, மதியனூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி – 606 107. |
| 17 | கோ.விக்னேஷ்பாபு, த/பெ கோபிநாத், 30–பி, 5–வது வீதி, பழமலைநாதர் நகர், விருத்தாச்சலம், கடலூர் – 606 001. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 17-05-2025

கலைஞர் 100 1924 - 2023



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் வெளியம்பாக்கம் கிராமத்தில் ஒன்றிய செயலாளர் கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்டத் துணைச் செயலாளர் கோகுலக்கண்ணன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜியாவுதீன், கவுன்சிலர்கள் சிவக்குமார், சாரதி, பாலசுப்பிரமணியம், மேகலா வெங்கடேசன், பொற்செல்வி வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார் ஒன்றிய நிர்வாகிகள் ரத்தினவேலு, பேக்கரி ரமேஷ் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பிரகாஷ் கண்ணன் ரமேஷ் ஆகியோர் உள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆலோசனைப்படி பாடியநல்லூர் ஊராட்சி பாடியநல்லூர் காலனி கிளை தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் சுய விவரப்படிவம் பூர்த்தி செய்து சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரனிடம் ஒப்படைத்தனர். உடன் பாடியநல்லூர் கிளை செயலாளர் எஸ். நாகராஜன், நா.பரசுராமன் மற்றும் கிளை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர் இருந்தனர்.